103—

சரணாலயம்

***20672—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகப் பகுதியை யானைகள் சரணாலயமாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகப் பகுதியை யானைகள் சரணாலயமாக அறிவிப்பு செய்வது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் ஏற்கெனவே காவேரி வன உயிரினச் சரணாலயம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சரணாலயத்தில் தேன்கனிக்கோட்டை வனச் சரகமும் அறிவிக்கப்பட்டிருக்கிறதா? மேலும், யானைகள், குடியிருப்புப் பகுதியில் புகுந்து உயிர்ச் சேதம் மற்றும் பயிர்ச் சேதத்தினை ஏற்படுத்துகின்றன. இதனைத் தடுப்பதற்காக அகழிகள் வெட்ட அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதியில் யானைகள் காப்புக் காட்டுப் பகுதியை விட்டு வெளியே வந்து எல்லையோரம் உள்ள கிராமங்களில் புகுந்து விவசாயப் பயிர்களுக்கும், கிராம மக்களின் உடைமைகளுக்கும், கால்நடைகளுக்கும் சேதத்தை

ஏற்படுத்துகின்றன. வன உயிரினங்கள் காட்டுப் பகுதியைவிட்டு வெளியே வராவண்ணம் தடுக்கும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பிறகு ரூ. 2.56 கோடி செலவில் 17.70 கிலோ மீட்டர் நீளத்திற்கு யானைகள் புகா அகழிகள் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.1.98 கோடி செலவிலே 79.90 கிலோ மீட்டர் நீளத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. யானைகள் குடிநீர் மற்றும் உணவைத் தேடி காட்டைவிட்டு வெளியே வராமல் தடுக்க ரூ.2.30 கோடி செலவிலே கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள், ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியிலே ரூ.4.4 இலட்சம் செலவிலே 25 ஹெக்டேர் பரப்பளவிலே யானைகளுக்கென தீவனத் தோட்டமும் அமைக்கப்பட்டுள்ளன. வனத் துறையின் சார்பிலே பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. பு. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 4 வனச் சரகங்களில் இந்த ஆண்டு மட்டும் 8 பேர் யானைகள் மிதித்து உயிரிழந்திருக்கிறார்கள். சுமார் 1000 ஹெக்டேர் பரப்பளவிற்கு நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்கள் சேதமடைந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. ஆனால், அவை முழுமையாக வெட்டப்படவில்லை. அந்த அகழிகளின் அகலம் மற்றும் ஆழம் குறைவாக உள்ளன. அதனால், யானைகள் அகழியைத் தாண்டி வந்து விடுகின்றன. ஆகவே, முழுமையாக அந்த அகழிகள் வெட்டப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல,

அகழிகள் குறிப்பிட்ட அளவு அந்தப் பகுதியிலே வெட்டப்பட்டிருக்கின்றன. ஏதாவது பகுதிகளைக் குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக அந்தப் பகுதியிலே அகழிகள் வெட்டும் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, வெங்கடாசலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

104—

மாசுபடுதல்

***36110—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, சார்வாய் கிராமத்திலுள்ள சேகோ தொழிற்சாலையின் கழிவு நீரால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பொற்பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்

கெங்கவல்லி தொகுதி, சார்வாய் கிராமம் சேகோ தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினைத் தடுக்க மாசு கட்டுப்பாடு வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. சார்வாய் கிராமத்தில் இயங்கும் 7 சேகோ தொழிற்சாலைகளும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, முறையாக இயக்கி, வாரியம் நிர்ணயித்த தர அளவிற்கு உட்பட்டு சுத்திகரிப்பு செய்து, பின்னர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகின்றன. மேலும், சேகோ தொழிற்சாலைகள் தொடர்பாகப் பெறப்படும் புகார்களுக்கு உடனுக்குடன் தமிழ்நாடு மாசு